www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Tsi6T

தென்காசி மாவட்டம்

இரண்டாம் தொகுத்தறித் தேர்வு - டிசம்பர் 2024

9-12-24

-----

வகுப்பு 6

தமிழ்

கால அளவு: 2.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 60

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1) மானம் + இல்லா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .............

அ) மானம் இல்லா ஆ) மானமில்லா இ) மானமல்லா ஈ) மானம்மில்லா

2) பொறையுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............

அ) பொறுமை + உடைமை ஆ) பொறை + யுடமை

இ) பொறு + யுடைமை ஈ) பொறை + உடைமை

3) உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல் .............

அ) மறைந்த ஆ) நிறைந்த இ) குறைந்த ஈ) தோன்றிய

4) பழையன கழிதலும் ............. புகுதலும்

அ) புதியன ஆ) புதுமை இ) புதிய ஈ) புதுமையான

5) வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் .............

அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக** 2×1=2

6) காமராசரைக் 'கல்விக்கண் திறந்தவர்' என்று மனமாரப் பாராட்டியவர் .............

7) குழந்தைகள் பள்ளியில் ஏற்றத் தாழ்வின்றிப் படிக்க ............. அறிமுகப்படுத்தினார்.

**இ) சொற்றொடரில் அமைத்து எழுதுக:** 3×1=3

8) உயர் கல்வி

9) செல்வம்

10) ஏற்றுமதி

**ஈ) பொருத்துக** 5×1=5

11) விடிவெள்ளி - போர்வை

12) மணல் - விளக்கு

13) புயல் - வீடு

14) பனிமூட்டம் - ஊஞ்சல்

15) கட்டுமரம் - பஞ்சுமெத்தை

**உ) ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி:** 4×2=8

16) நாம் எதை நம்பி வாழக்கூடாது?

17) 'கண்மணியே கண்ணுறங்கு' - என்னும் பாடலில் இடம்பெற்றுள்ள மூன்று நாடுகள் யாவை?

18) உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்?

19) ஆக்கம் யாரிடம் வழிகேட்டுச் செல்லும்?

20) நான்கு நிலங்கள் என்பன யாவை?

21) சிறு வணிகப் பொருட்கள் யாவை?

**ஊ) பின்வரும் மனப்பாடப் பாடலினை அடிமாறாமல் எழுதுக:** 4+2=6

22) 'மன்னனும்' எனத் தொடங்கும் மூதுரைப் பாடலினை எழுதுக.

23) 'சொல்லுக' எனத் தொடங்கும் குறளினை எழுதுக.

**எ) ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:** 3×3=9

24) கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகளைப் பட்டியலிடுக.

25) காமராசரின் கல்விப்பணிகள் குறித்து எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



26) ஆசாரக் கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

27) பொங்கல் விழாவின்போது உங்கள் ஊரில் என்னென்ன சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வீர்கள்?

28) பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருட்கள் யாவை?

**ஐ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2×2=4**

29) இன எழுத்துகள் என்றால் என்ன?

30) மயங்கொலி எழுத்துகள் யாவை?

31) சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?

**ஒ) பின்வரும் கட்டுரை வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி: 2×5=10**

32) அண்ணா நூற்றாண்டு நூலகத்தினைப் பற்றி சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

33) 'உழைப்பே மூலதனம்' கதையினைச் சுருக்கி எழுதுக.

34) 'பொங்கல் திருநாள்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

35) பிறந்த நாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

**ஓ) பின்வரும் அனைத்து மொழிப்பயிற்சி வினாக்களுக்கும் விடையளி: 4×2=8**

**36) இடம் மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக:**

அ) முளையிலே விளையும் தெரியும் பயிர்

ஆ) ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை

**37) மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக:**

அ) தேர்த் திருவிலாவிற்குச் சென்றனர்.

ஆ) வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்லது.

**38) சரியான விடையைத் தேர்ந்தெடு:**

அ) தம்பி வா (இவர்/இங்கே)

ஆ) யார் தெரியுமா? (அவர்/யாது)

**39) தமிழ்க்கலைச்சொல் எழுதுக:**

அ) Welcome

ஆ) E-mail

சிவக்குமார். மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மேநிலை
நல்லம்-622809
தென்காசி மாவட்டம்.

- - - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com